


# வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிறது

# டிரம்ப் வெற்றியால் பின்னலாடை ஏற்றுமதியில் சாதகமான சூழல்

# 20 மாணவர்கள் மருத்துவ கல்லூரியில் சேர ஓராண்டு தடை


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 9-11-2024 சனிக்கிழமை •வெளியூர்: 10-11-2024 ஞாயிற்றுக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்





# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 23 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 6

மாநிலம் பயனுற!





● புதுச்சேரி ● சனிக்கிழமை, நவம்பர் 9, 2024 ● வெளியூர்: 10-11-2024, ஞாயிற்றுக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 122 ● 6 பக்கம் ● ரூ.6

## 6 எம்.பி.பி.எஸ்., 28 பி.டி.எஸ். இடங்கள் வீணானது: 20 மாணவர்களுக்கு ஓராண்டு தடை

**சென்னை, நவ.9-**

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான முதல் சுற்று மற்றும் இரண்டாம் சுற்று கலந்தாய்வு நிறைவடைந்த பிறகு, மீதமுள்ள இடங்களை நிரப்ப இறுதி சுற்று கலந்தாய்வு நடத்தப்பட்டது.

இந்நிலையில், அதில் பங்கேற்று கலந்தாய்வில் இடங்கள் பெற்றவர்களில் சிலர் கல்லூரிகளில் சேராமல் படிப்பை கைவிட்டனர். இதனால், சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் 6 எம்.பி.பி.எஸ். இடங்கள் காலியாகி உள்ளன.

இதேபோன்று, கடலூர் அரசு பல் மருத்துவக் கல்லூரியில் 4 பி.டி.எஸ். இடங்கள், சுயநிதி கல்லூரிகளில் 24 பி.டி.எஸ். இடங்கள் என 28 பல் மருத்துவ இடங்கள் நிரம்பாமல் உள்ளன. மருத்துவ மாணவார் சேர்க்கைக்கு தேசிய மருத்துவ ஆணையம் வழங்கிய அவகாசம் நிறைவடைந்த நிலையில், அந்த இடங்களை இனி நிரப்ப முடியாது.

இதனால் நடப்பாண்டில் அந்த இடங்கள் வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இறுதிச் சுற்று கலந்தாய்வில் பங்கேற்று இடங்களைப் பெற்றவர்களில் எம்.பி.பி.எஸ். ஒதுக்கீடு பெற்ற 4 பேரும், பி.டி.எஸ். ஒதுக்கீடு பெற்ற 16 பேரும் கல்லூரிகளில் சேரவில்லை. இதையடுத்து அவர்களுக்கு அபராதம் மற்றும் ஓராண்டு மருத்துவக் கல்வியில் சேருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சில மாணவர்கள் முந்தைய சுற்று கலந்தாய்வின்போதே கல்லூரிகளில் இருந்து விலகுவதற்கான அபராதத்தை செலுத்தியதால் அவா்கள் அடுத்த ஆண்டு கலந்தாய்வில் பங்கேற்கத் தடையில்லை என்று மருத்துவக் கல்வி இயக்கக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தேஜஸ்வி யாதவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து



**சென்னை, நவ.9-**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ்தள பதிவில் கூறியிருப்பதாவது:

பீகார் மாநிலத்தின் துடிப்புமிக்க இளம் எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.

சமூகநீதி, மதச்சார்பின்மை, சமத்துவம் ஆகியவற்றில் தாங்கள் கொண்டுள்ள பிடிப்பானது முற்போக்கான பீகாரைத் தொடர்ந்து ஊக்குவிக்கட்டும். நியாயமான, அனைவரையும் அரவணைத்துப் போற்றும் ஓர் எதிர்காலத்துக்காகப் பணியாற்றி வரும் தாங்கள் வலிமையோடும் வெற்றியோடும் திகழ வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## குற்றால அருவிகளில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்த சுற்றுலா பயணிகள்



**தென்காசி, நவ.9-**

தென்காசி மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த 2 வாரங்களாக பெய்த கனமழையின் காரணமாக குற்றால அருவிகளான மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், புலி அருவி, சிற்றருவி உள்ளிட்ட அருவிகளில் அவ்வப்போது வெள்ளப்பெருக்கு ஏற்படுவதும் பின்பு சீராவதுமாக தொடர்ந்து வந்தது.

இந்த நிலையில் நேற்று பகல் முழுவதும் தென்காசி மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மிதமான அளவில் சாரல் மழை விட்டு விட்டு பெய்தது. இதனால் குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்தும் குறைந்து சீராக கொட்டி வருகிறது.


இன்று விடுமுறை தினம் என்பதால் குற்றாலம் மெயின் அருவியில் காலை முதல் சுற்றுலா பயணிகள் அதிகளவில் குளித்து மகிழ்ந்தனர்.

ஐந்தருவியின் ஐந்து கிளைகளில் தண்ணீர் விழுந்து வந்த நிலையில் தற்போது 3 கிளைகளில் மட்டுமே அதிகம் தண்ணீர் விழுந்து வருகிறது. பழைய குற்றால அருவியிலும் தண்ணீர் சீராக விழுவதால் விடுமுறை தினத்தை கழிப்பதற்கு குற்றால அருவிகளை நோக்கி சுற்றுலா பயணிகள் காலை முதலே அதிக அளவில் வருகை தந்துள்ளனர்.

# வங்கக்கடலில் உருவாகிறது புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி

**சென்னை, நவ.9-**

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியில் இருந்து வரும் ஈரப்பத காற்று, வட இந்திய பகுதிகளில் இருந்து வீசும் வறண்ட காற்று ஆகியவற்றால் ஏற்படும் காற்று குவிதலால் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மிதமான மழை முதல் கனமழை பெய்து வருகிறது.




இந்த சூழலில் வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி கடந்த 6ந் தேதி உருவாக வாய்ப்பு இருந்த நிலையில், மியான்மர் கடலோரப் பகுதியில் நிலவிய காற்று சுழற்சியால், வடகிழக்கு காற்றின் வருகை தடைப்பட்டு, தாழ்வுப்பகுதி உருவாவது தள்ளிப்போனது.

இதற்கிடையே மியான்மர் கடலோரப் பகுதியில் நிலவி வந்த காற்று சுழற்சி வலுவிழந்து, நாளை தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகிறது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையவும் வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படும் நிலையில், அதுகுறித்து வானிலை ஆய்வு மையம் நாளை தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வங்கக் கடலில் உருவாகி, மேற்கு நோக்கி நகர்ந்து தமிழ்நாடு, இலங்கை கடலோரப் பகுதிகளை நோக்கி வரும் என சொல்லப்படுகிறது. இதன் காரணமாக நாளை இரவில் இருந்து தமிழ்நாட்டில் பரவலாக நல்ல மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருக்கிறது. இதன்படி வருகிற 15ந் தேதி வரை இந்த மழை பெய்யக்கூடும்.


அதிலும், வட கடலோர மாவட்டங் கள், டெல்டா மாவட்டங் களில் கன முதல் மிக கன மழை வரையிலும், தெற்கு, உள் மாவட்டங்கள் உள் ளிட்ட பிற பகுதிகளில் மிதமானது முதல் கனமழை வரையிலும் பெய்ய வாய்ப்பு இருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்றும், நாளையும் தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழையும், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

## டிரம்ப் வெற்றியால் பின்னலாடை ஏற்றுமதி வர்த்தகத்தில் சாதகமான சூழல் ஏற்பட வாய்ப்பு: உற்பத்தியாளர்கள் நம்பிக்கை

**திருப்பூர், நவ.9-**

டொனால்டு டிரம்ப் மீண்டும் அமெரிக்க அதிபராகி உள்ளதால் பின்னலாடை ஏற்றுமதி வர்த்தகத்தில் சாதகமான சூழல் நிலவும் என திருப்பூர் பின்னலாடை துறையினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.



2வது முறையாக மீண்டும் டொனால்டு டிரம்ப் அமெரிக்க அதிபராகி இருப்பது இந்தியாவுக்கு சாதகமானதாக கருதப்படுகிறது.

டிரம்ப்பின் சீன எதிர்ப்பு கொள்கை, நம் பிரதமருடன் அவர் கொண்டுள்ள நட்பு, பைடன் காலத்தில் கிடப்பில் போடப்பட்டுள்ள வரியில்லாத வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை உயிர்ப்பிக்கப்பட வாய்ப்பு உள்ளிட்ட காரணங்கள் திருப்பூர் பின்னலாடைத் துறைக்கும் சாதகமானதாக அமையும் என்ற எதிர்பார்ப்பு தொழில் துறையினரிடம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பின்னலாடை துறை ஆலோசகர் சபரி கிரீஷ் கூறியதாவது:

அமெரிக்காவில் ஜனநாயக கட்சியை விட, குடியரசு கட்சி ஆட்சி அமையும்போது அண்டை நாடுகளுடன் இணக்கமான போக்கு கடைபிடிக்கப்படுகிறது. டிரம்ப்பை பொறுத்தவரை போரை விரும்பாதவர்.

உக்ரைனுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். அதனால் உக்ரைன் ரஷ்யா போர் முடிவுக்கு வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த போர் நின்றால், ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை பெறும். ஐரோப்பாவுக்கான இந்திய ஏற்றுமதி வர்த்தகம் எழுச்சி பெறும்.

சீன எதிர்ப்பு கொள்கை கொண்டவர் டிரம்ப். ஏற்கனவே இவரது பதவி காலத்தில்தான், சீனப் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்பட்டது. ஜோ பைடன் ஆட்சி காலத்தில் கிடப்பில் போடப்பட்ட அமெரிக்கா இந்தியா வர்த்தக ஒப்பந்தப் பேச்சு வார்த்தை டிரம்ப்பின் வருகையால் நிறைவேற வாய்ப்பு உள்ளது. இதனால் அமெரிக்காவுக்கான இந்திய பொருட்கள் ஏற்றுமதி அதிகரிக்கும் என்கிற நம்பிக்கை பிறந்துள்ளது.

டாலருக்கு மாற்றாக பொதுவான கரன்சியை கொண்டு வர இந்தியா உள்பட பிரிக்ஸ் நாடுகள் முயற்சித்து வருகின்றன. இதனால் டாலர் ஸ்திரத்தன்மை இழப்பதை டிரம்ப் விரும்பமாட்டார். இந்தியாவில் சில அமெரிக்க பொருட்களுக்கான வரியை குறைக்க அழுத்தம் கொடுப்பார். இது போன்ற ஒரு சில பாதகங்களும் உள்ளன.

சாதக, பாதகங்கள் இருந்தாலும் ஒட்டு மொத்தத்தில் டிரம்ப்பின் வெற்றி இந்தியாவுக்கு நன்மை தருவதாகவே அமையும். நம் நாட்டுடன் குறிப்பாக பிரதமர் மோடியுடன் நல்ல நட்பு கொண்டுள்ளார். அதனால் அமெரிக்காவின் வெளியுறவு கொள்கையில் இந்தியாவுக்கு பாதகமான அம்சங்கள் விலகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 9 ஆண்டுகளாக வழங்கப்படாத தொல்காப்பியர் விருதுகளை உடனே வழங்க வேண்டும் -ராமதாஸ் வலியுறுத்தல்

**சென்னை, நவ. 9-**

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

“செம்மொழிக்கு சிறந்த முறையில் சேவையாற்றிய வர் களுக்காக செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் தொல்காப்பியர் விருது உள்ளிட்ட குடியரசுத் தலைவர் விருதுகள் கடந்த 9 ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. அன்னை தமிழுக்கு அறிஞர்கள் சேவை செய்வதை ஊக்குவிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இந்த விருதுகள் கிட்டத்தட்ட ஒரு பத்தாண்டாக வழங்கப்படாதது தமிழுக்கு இழைக்கப்படும் துரோகமும், தமிழ் வளர்ச்சிக்கு போடப்படும் முட்டுக்கட்டையும் ஆகும்.

கடந்த 9 ஆண்டுகளில் இந்த விருதுக்கு தகுதியானவர்களை தேர்வு செய்யும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. கடந்த 202122ஆம் ஆண்டு வரை இந்த விருது பெற தகுதியானவர்களை தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் பல ஆண்டுகளுக்கு தகுதியானவர்களின் பெயர்கள் தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதன் பின், கடந்த சில ஆண்டுகளாக இந்த விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவில்லை என்று கூறப்படுகிறது.



தமிழ் செம்மொழிக்கான சேவை மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டோருக்கு கடந்த 9 ஆண்டுகளாக வழங்கப்படாத தொல்காப் பியர் விருது, குறள் பீடம் விருது, இளம் அறிஞர் விருது ஆகியவற்றை உடனடியாக வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமின்றி, சென்னையில் செயல்பட்டு வரும் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு மத்திய பல்கலைக் கழகத்திற்கு இணையான தகுதி வழங்கி, அதன் வாயிலான மொழி ஆராய்ச்சிகளை அதிகரிக்கவும் மத்திய அரசு முன்வரவேண்டும்.”

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



**தென்காசி, நவ. 9-**

தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் செல்வமோகன்தாஸ் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

தென்காசி தெற்கு மாவட்ட அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு புதிய நிர்வாகிகள் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான செல்வமோகன்தாஸ் பாண்டியனை பாவூர்சத்திரம் மாவட்ட கழக அலுவலகத் தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். பின்னர் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான செல்வ மோகன்தாஸ் பாண்டியன் தலைமை தாங்கினார். திருநெல்வேலி மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் முனைவர் சிவ ஆனந்த், மாவட்ட கழக அவைத்தலைவர் சண்முகசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் தர்மசீலன் வரவேற்புரை யாற்றினார். மாவட்ட தலைவர் குத்தால பெருமாள் தொகுத்து வழங்கினார். புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் செயல்படுவது குறித்து மாவட்ட செயலாளர் செல்வ மோகன்தாஸ் பாண்டியன், மண்டல செய லாளர் சிவ ஆனந்த், மாவட்ட அவைத் தலைவர் சண்முக சுந்தரம் ஆகியோர் விளக்கமாக பேசினர்.

கூட்டத்தில் மாவட்ட துணை தலைவர் ஜெய ஜோசுவாரூபன், மாவட்ட இணை செயலாளர்கள் சுமன், ஜோயல் துரை, ஷாஜித் அஸ்வின், சுடலைக்கனி, துணை செயலாளர்கள் வேல்சுரேஷ், செல்வகுமார், முருகேசன் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு வடக்கு மாவட்ட இணை செயலாளர் சரவணன், துணை செயலாளர் மாரியப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். மாவட்ட பொருளாளர் சக்திவேல் நன்றி தெரிவித்தார்.

# முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியில் ஆட்சியர் ஆய்வு



தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப தேர்வுகள் நடைபெறுவதையொட்டி வேலூர் முஸ்லிம் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# சுப்ரமணிய சுவாமி கோவிலில் கந்த சஷ்டி திருவிழா





**சேலம், நவ. 9-**

சேலம் மாவட்டம், செவ்வாய்பேட்டை, சித்திர சாவடியில் உள்ள சுப்ரமணிய சுவாமி கோவிலில், கந்த சஷ்டி திருவிழா வின் ஆறாம் நாளான சூரசம்ஹாரம் விழா மிகுந்த ஆன்மிக வெள்ளமாக வெகு விமரிசையாக கொண்டாடப் பட்டது. இந்த புனித நாளில், சுவாமிக்கு சிறப்பு அபிஷேகமும், மிகுந்த பக்தி முழங்க பூஜைகளும் கோவில் மரபுகளின்படி சிறப்பாக நடத்தப்பட்டன.

விழாவின்போது, பக்தர்கள் சிறப்பு வழிபாடுகளை செய்து, சூரசம்ஹாரத்தை எதிர்நோக்கி உள்ளம் கனிந்த பெருமிதத்துடன் இறைவனை தொழுதனர். சூரசம்ஹாரத்தில் சூரபத்மன் எனும் அசுரனை அழித்து, மக்களுக்கு சமரசத்தை வழங்கிய முருகப்பெருமானின் தோற்றத்தை நினைவு கூறும் இந்த நிகழ்வு, பக்தர்களுக்கு தன்னம்பிக்கையும் ஆன்மீக சக்தியையும் அளிக்கிறது. கந்த சஷ்டி திருவிழாவின் முக்கிய நோக்கம், நாம் தினந்தோறும் சந்திக்கும் துன்பம், சோதனை எனும் அசுரங்களை வென்று, இறைவன் மீது நம்பிக்கையுடன் வாழ்வதைப் புரியவைத்தல் ஆகும். துன்பத்தைப் போக்கி நமக்கு இன்பத்தை அளிக்கும் முருகப்பெருமான், நம்மை தீமைகளிலிருந்து காக்கும் தெய்வமாக காட்சி தருகிறார் என்று கோவில் குருக்கள் சுப்பிரமணிய சுவாமிகள் மற்றும் சேனாபதி குருக்கள் தெரிவித்தனர்.

## தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்
9.11.2024 (சனிக்கிழமை)

# ரயில் விபத்தை தடுக்கும் ‘கவாச்‘

கடந்த ஜூன் மாதம் 17ந்தேதி மேற்கு வங்காளத்தில் உள்ள அகர்தாலாவில் இருந்து சியல்டா நகருக்கு சென்று கொண்டிருந்த கஞ்சன்ஜங்கா எக்ஸ்பிரஸ் ரெயில் ரங்காபாணி ரெயில் நிலையம் அருகே சிக்னல் கோளாறு காரணமாக நின்று கொண்டிருந்தபோது, அதே ரெயில் பாதையில் அதற்கு பின்னால் வந்து கொண்டிருந்த சரக்கு ரெயில் பயங்கரமாக மோதியதில், அந்த ரெயிலின் டிரைவர் உள்பட 11 பேர் இறந்துவிட்டனர். மேலும் 25 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதுபோல, கடந்த ஆண்டு ஒடிசா மாநிலத்தில் இருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த ஒரு ரெயில் விபத்துக்குள்ளானதில் 296 பேர் உயிரிழந்து ஏராளமானோர் காயமடைந்தனர். கடந்த மாதம் 11 ந்தேதி திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டையிலும் ரெயில் விபத்து ஏற்பட்டது. இந்த பகுதிகளில் எல்லாம் ரெயில் விபத்துகளை தடுக்கும் ‘கவாச்’ கருவி மட்டும் பொருத்தப்பட்டிருந்தால், இந்த விபத்துகளெல்லாம் நடந்திருக்காதே, இதைப் பொருத்த ஏன் தாமதம்? இதைப் பொருத்த செலவு அதிகம் ஆகும் என்றாலும், பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டால், இதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது என்ற குரல் உரக்க எழும்புகிறது.

விபத்தே நடக்கக்கூடாது என்ற வகையில், ரெயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிறுவனம் வடிவமைத்ததுதான் இந்த ‘கவாச்’ சாதனமாகும். பல்வேறு கருவிகளை உள்ளடக்கிய ‘கவாச்’ சாதனத்தில் ரெயில் பாதையில் செல்போன் டவர் போல கோபுரங்கள் அமைப்பது, கேபிள்கள் பதிப்பது, தண்டவாளத்தில் ரேடியோ அதிர்வலை கருவியை பொருத்துவது, மற்றும் ரெயில் என்ஜின்கள், ரெயில் நிலையங்களிலும் ‘கவாச்’ கருவியைப் பொருத்துதல் போன்ற பல பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுபோல இன்னும் சில சாதனங்கள் பொருத்தப்படவேண்டும். இதை பொருத்திவிட்ட பிறகு, ஒரே தண்டவாளத்தில் இரு ரெயில்கள் சென்று கொண்டிருந்தாலோ, அதிவேகத்தில் சென்றாலோ, சிக்னலை மீறி ரெயில் சென்றாலோ, எதிரும் புதிருமாக சென்றாலோ, பருவநிலை மோசமாக இருந்தாலோ ‘கவாச்’ கருவி உடனடியாக டிரைவருக்கு அபாய எச்ரிக்கை அளிக்கும். அதைக்கேட்டு டிரைவர் உடனடியாக நிறுத்தாமலோ, 15 கிலோ மீட்டருக்கும் குறைவாக வேகத்தை குறைக்காமல் இருந்தாலோ ‘கவாச்’ கருவி தானாகவே ‘பிரேக்’ பிடித்து ரெயிலை நிறுத்திவிடும்.

இந்தியாவில் இப்போது மொத்தம் உள்ள 68 ஆயிரம் கிலோ மீட்டர் நீள ரெயில் தண்டவாளத்தில் 1,465 கிலோ மீட்டர் தூரத்திலும், 144 ரெயில்களிலும் தென் மத்திய ரெயில்வேயில் மட்டும் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், சில மண்டல ரெயில்வேக்களில் 3 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்துக்கு பொருத்த ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் தென்னக ரெயில்வே இல்லை என்பது பெரிய குறையாகும்.

# வீரமா முனிவர் 344வது பிறந்தநாள் விழா



**தூத்துக்குடி, நவ. 9-**

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு யூனியன் காமநாயக்கன்பட்டியில் தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமா முனிவர் 344வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு காமநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியின்போது கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் .க.மகாலட்சுமி, புனித பரலோக மாதா பசலிகா பங்கு தந்தை அந்தோணி குரூஸ், காமநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் க.கலைச்செல்வி, கடம்பூர் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் நாகராஜா, கிராம மக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கும்பகோணம் நாகேஸ்வரன் கோவிலில் திருக்கல்யாண வைபவம்





**சுவாமிமலை, நவ. 9-**

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நாகேஸ்வரன் திருக்கோவிலில் கந்த சஷ்டி பெருவிழா 2ஆம் தேதி தொடங்கியது. அதைத் தொடர்ந்து கோவிலில் ஆறு நாட்களுக்கும், முருக பெருமானுக்கு விசேஷ பூஜைகள் மற்றும் அலங்காரங்கள் செய்யப்பட்டது.

அதனை முன்னிட்டு நேற்று முருகப்பெருமான் ஆறுதலை கொண்ட சூரபத்மனை வதம் செய்யும் சூரசம்காரம் நிகழ்வு நிறைவு பெற்றதை தொடர்ந்து இன்று இரவு வள்ளி தெய்வானை ஸமேத அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்கு சுவாமிக்கு மாலை மாற்றும் நிகழ்ச்சியும், ஊஞ்சல் உற்சவம், மங்கள வாத்தியங்கள் முழங்க யானை முன்செல்ல ஏராளமான பெண் பக்தர்கள் சீர்வரிசை எடுத்து கோவில் பிரகாரத்தை சுற்றி வருவது உள்ளிட்ட சம்பிரதாய நிகழ்வுகள் நடைபெற்றது. பின்னர் கோவிலில் உள்ள மணிமண்டபத்தில் மணமேடையில் வள்ளி தெய்வானை ஸமேத சுப்பிரமணிய சுவாமிக்கும் மாங்கல்யம் அணிவிக்கும் வைபவம் சிறப்பாக நடைபெற்று மங்கள தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

நடைபெற்ற கந்த சஷ்டி ஏழாம் நாள் திருக்கல்யாணம் வைபவ நிகழ்ச்சியில் கும்பகோணம் மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு பகுதியிலிருந்து சுமார் 800க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை செயல் அலுவலர் இல.விஜய் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்தனர்.

# வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம்



**வளத்தி, நவ. 9-**

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம், வளத்தி, கன்னலம் சாத்தனந்தல், சிறுதலைப்பூண்டி ஆகிய ஊராட்சிகளில் செஞ்சி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொருப்பாளர், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல்மாலிக்குடன், வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கண்ணன் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராம சரவணன், ஒன்றிய கவுன்சிலர் ஷியாமளா ஜெய்சங்கர், ஊராட்சி மன்ற தலைவர் தமிழரசி பாண்டியன், கட்சி நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் திறப்பு





நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அணைக்கட்டு துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலக கட்டடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். அருகில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார்.

# எக்ஸ் கதிர்களை கண்டுபிடித்த ராண்ட்ஜன் படத்துக்கு மாலை



**தஞ்சாவூர், நவ. 9-**

கும்பகோணம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் எக்ஸ்ரே கண்டுபிடித்த நாளான நேற்று 8 எக்ஸ் கதிர்களை கண்டுபிடித்த கீ.சி. ராண்ட்ஜன் தினமாக கொண்டாடப் பட்டு படத்திற்கு மரியாதை நிகழ்வும் தொடர்ந்து நுண்கதிர் நுட்புநர்கள் ரத்த தானம் முகாமும் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர்.கமருல் ஜமான் மற்றும் மருத்துவ நிலைய அலுவலர் பிரபாகர் தலைமை நுண்கதிர் நுட்புநர் (சிடி.ஸ்கேன்) மலர்வண்ணன் மற்றும் நுண்கதிர் நுட்புநர் செல்வம் நுண்கதிர் நுட்புநர்கள், மருத்துவர்கள், செவிலிய கண்காணிப்பாளர் மருத்துவமனை ஊழியர்கள் கலந்துகொண்டு எக்ஸ்ரே தினத்தை சிறப்பித்தனர். மேலும் மலர்வண்ணன், செல்வம், கோவிந்தராசு, கிருஷ்ணகுமார் மில்டன், குடியரசு செந்தில் முத்து பாண்டி ரத்ததானம் செய்தனர்.

# பள்ளி வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச்செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு புதிய வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தலையாம்பள்ளம் ஊராட்சியில் உள்ள புதிய அரசினர் உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தை பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அருகில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணாதுரை.

# தேசிய சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கம்



**சேலம், நவ. 9-**

சேலம் மாவட்ட நீதி மன்றம் சார்பில், சேலம் விங்ஸ் ரோட்டரி சங்கம் மற்றும் சேலம் மாவட்ட சட்ட உதவி மையம் ஆகியவை இணைந்து, சேலம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் தேசிய சட்ட விழிப்புணர்விற்காக கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்விற்கு தொழில் பயிற்சி நிலைய துணை இயக்குனர் ராஜேஸ்வரி தலைமை தாங்கினார். சேலம் விங்ஸ் ரோட்டரி சங்கத்தின் தலைவர், ஜென்னிஸ் அகாடமி தலைவர், மற்றும் சேலம் மாவட்ட கோர்ட் பேனல் உறுப்பினர் முனைவர் கர்லின் மேரி முன்னிலை வகித்தார். சேலம் டிஸ்ட்ரிக்ட் கோர்ட் சட்ட உதவி மைய பேனல் அட்வகேட் ராஜா விழிப்புணர்வு குறித்து இருபால் பயிற்சியாளர்களிடம் விளக்கமாக கூறினார்.

இந்நிகழ்வில் இளநிலை பயிற்சி அலுவலர் வசந்தகுமார் வரவேற்றார்கள். எம்மிஸ் ஸ்பெஷல் ஸ்கூல் தாளாளர் ஹேமா பிரைட், எஸ் கே ஹெல்த் கேர் சென்டர் துறைத் தலைவர் சுஜாதா அய்யப்பன், பிரைடல் மேக்கப் உரிமையாளர் வாணி சங்கர், வஸ்திரகலா கடை உரிமையாளர் சுபா கோபி, தொழிற் பயிற்சி நிலைய பயிற்சி அலுவலர் தனபாலன் மற்றும் விஜயலட்சுமி, தனபிரியாவதி, சபரீஷ் ஆகிய அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். கருத்தரங்க நிகழ்வில் உதவி பயிற்சி அலுவலரும் என்.எஸ்.எஸ். திட்ட ஒருங்கிணைப்பாளருமான கிருஷ்ணகுமார் நன்றியுரை ஆற்றினார்.

# மரக்கன்று நட்ட ஆட்சியர்



திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வன்னிகோனந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற புதிய வகுப்பறை கட்டடிடங்கள் திறப்பு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் கார்த்திகேயன் குத்துவிளக்கேற்றி, பணிகளை தொடங்கி வைத்து, மரக்கன்றுகளை நட்டு வைத்தார்கள்.

# தையல் இயந்திரம் வழங்கல்



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம், வரதராஜபுரம், புனித சேவியர் குழந்தைகள் இல்லத்தில் தங்கியுள்ள பெண்களின் கோரிக்கையை ஏற்று தையல் இயந்திரங்களை வழங்கினார்.

# திருமயம் சத்தியகிரீஸ்வரர் கோவில் கும்பாபிஷேக விழா

## அமைச்சர்கள் பங்கேற்பு



**புதுக்கோட்டை, நவ. 9-**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஊராட்சிக்குட்பட்ட திருமயம் சத்தியகிரீஸ்வரர் மற்றும் சத்தியமூர்த்தி பெருமாள் கோவில்களின் அஷ்டபந்தன மஹா குடமுழுக்கு விழா அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் ஊராட்சி மன்ற தலைவர் சிக்கந்தர் முன்னிலையில் நடந்து முடிந்தது. பொதுமக்கள் திரளாக வருகை தந்து இறைவனை தரிசித்து சென்றனர். நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள், கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# ஏனாமில் எரிவாயு குழாய் பதிப்பால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 2ம் கட்டமாக ரூ.54.74 கோடி

## முன்னாள் அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ் முயற்சிக்கு முதலமைச்சர் பாராட்டு

**புதுச்சேரி, நவ. 9-**

எரிவாயு குழாய் பாதிப்பினால் பாதிக்கப்பட்ட ஏனாம் மீனவர்களுக்கு இரண்டாம் கட்டமாக ரூ. 54.74 கோடி வழங்கப்படும் என முதலமைச்சர் ரங்கசாமி தெரிவித்தார்.

ஏனாம் பிராந்தியத்திற்குட்பட்ட மீனவ கிராமங்களில் இந்திய அரசின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனமான ஓ.என்.ஜி.சி., நிறுவனம் கடலில் இருந்து குழாய் பாதை அமைத்து பெட்ரோலியம் மூலப் பொருட்களை கொண்டு செல்ல உள்ளது.

இதற்காக மீன்பிடி தொழில் செய்ய தடை விதிக்கப்பட்டது. மீனவர்களுக்கு ஏற்பட்ட இந்த இழப்பை ஈடு செய்ய நிதி வழங்க முடிவு செய்யப்பட்டது. முதற்கட்ட நிவாரணமாக 15 மாதத்திற்கு ரூ.90.54 கோடி, 5279 மீனவர்களின் வங்கி கணக்கில் கடந்த மார்ச் மாதம் செலுத்தப்பட்டது.



அதன் தொடர்ச்சியாக தற்போது இரண்டாம் கட்டமாக 9 மாதத்திற்கு ரூ.54.74 கோடி, பாதிக்கப்பட்ட 5,279 மீனவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட உள்ளது. மேலும், முதல் கட்ட நிவாரணத் தொகை வழங்கியபோது, விடுபட்ட 231 பேருக்கு நிவாரணம் வழங்க திருத்தம் செய்யப்பட்ட அரசாணையை முதலமைச்சர் ரங்கசாமி நேற்று சட்ட சபையில் வெளியிட்டார்.

பின்னர் முதலமைச்சர் ரங்கசாமி கூறியதாவது, 'பாதிக்கப்பட்ட மீனவ சமுதாய மக்களுக்கு முதலில் ரூ.90.54 கொடுக்கப்பட்டது. தற்போது இரண்டாவது தவணையாக ரூ.54.74 கோடி வழங்கப்பட உள்ளது.

இதுதவிர, விடுபட்டவர்களுக்கு ரூ.6 கோடி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது அதற்கான அரசாணை வழங்கப்பட்டுள்ளது. ஏனாம் மக்களின் வாழ்விற்காக இந்த நிதியை எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் கொடுப்பது என்பது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இதற்காக டெல்லி சிறப்பு பிரதிநிதி மல்லாடி கிருஷ்ணாராவ் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது என, தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது புதுச்சேரிக்கான டெல்லி சிறப்பு பிரதிநிதி மல்லாடி கிருஷ்ணாராவ் உடன் இருந்தார்.

# பயிர் சாகுபடி பரப்பு கணக்கிடும் பணி



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், கருங்குழி கிராமத்தில் மின்னணு முறையில் பயிர் சாகுபடி பரப்பு கணக்கிடும் பணியினை துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார்.

# நலத்திட்ட உதவி வழங்கிய அமைச்சர்




சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் சேலம் மாவட்டம், ஓமலூர் ஜெயந்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு திட்ட முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி.

# காரைக்கால் அண்ணாமலையார் கோவிலில் திருகல்யாண வைபவம்



**காரைக்கால், நவ. 9–**

காரைக்கால் மாதா கோவில் வீதியில் உள்ள அண்ணாமலையார் கோவிலில் வள்ளி, தேவசேனா, முருகப்பெருமான் திருகல்யாண வைபவம் நேற்று மிக விமரிசையாக நடைபெற்றது.

காரைக்காலில் பிரசித்தி பெற்ற ஸ்ரீகைலாசநாதர், ஸ்ரீ நித்யக்கல்யாணப்பெருமாள் தேவஸ்தானத்திற்கு சொந்தமான உண்ணாமுலை உடனமர் ஸ்ரீஅண்ணாமலையார் கோவிலில், வள்ளி, தேவசேனா, முருகப்பெருமான் திருக்கல்யாணம் நிகழ்ச்சி, நேற்று காலை வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

வைதீக முறைப்படி நடைபெற்ற திருக்கல்யாண வைபவத்தில் கோவில் தனி அதிகாரி காளிதாசன், கோவில் சேவார்த்திகள் ஸ்ரீ லலிதாசகஸ்ரநாம சத்சங்கம் நிர்வாகிகள், கந்தாஷ் பிளைவுட் என். சிவலிங்க ராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். திருக்கல்யாணத்தை தொடர்ந்து ஸ்ரீவள்ளி, ஸ்ரீ தேவசேனா, ஸ்ரீமுருகப்பெருமானுக்கு மகாதீபாராதனை நடைபெற்றது.

# பாலதண்டாயுதபாணி சுவாமி கோவிலில் கந்தசஷ்டி பெருவிழா



**கோவை, நவ. 9–**

வரலாற்று சிறப்புமிக்க கந்தசஷ்டி பெருவிழா தமிழ்நாட்டில் உள்ள அனைத்து முருகன் கோவில்களிலும் மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற்று வருகின்றது. அதனைத்தொடர்ந்து கோவை காந்திபார்க் பகுதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற பாலதண்டாயுதபாணி சுவாமி கோவிலில் 62ம் ஆண்டு கந்த சஷ்டி பெருவிழா மற்றும் லட்சார்ச்சனை விழா கடந்த வெள்ளிக் கிழமை முதல் கோலாகலமாக நடைபெற்று வருகின்றது. கந்தசஷ்டி விழா ஏழாம் நாளில் மாலையில் திருக்கல்யாண உற்சவம் நிகழ்ச்சி அறங்காவலர்குழு தலைவர் து. பரமசிவன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திட்ட குழு உறுப்பினர் கார்த்திக் செல்வராஜ் கவுன்சிலர் மற்றும் அம்சவேணி கார்த்திக் செல்வராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு பாலதண்டாயுதபாணி அருள்பெற்றனர். இந்நிகழ்ச்சியில் அறங்காவலர்கள் ஆர்.எஸ்.மகேஸ்வரன், பல.விஜயலட்சுமி, நா.ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருக்கல்யாண உற்சவம் நிகழ்ச்சியில் பக்தர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டு பாலதண்டாயுதபாணியை தரிசித்து அருள் பெற்றனர்.

# ஆறுமுக வேலவர் கோயிலில் கந்தசஷ்டி விழா



**கோவை, நவ. 9–**

கோவை இடையர்பாளையம் காந்திநகர் பகுதியில் உள்ள பராசக்தி மாரியம்மன் கோவிலில் அமைந்துள்ள வள்ளி தெய்வானை உடனுறை ஆறுமுக வேலவர் சன்னிதானத்தில் முதலாமாண்டு கந்தசஷ்டி, சூரசம்ஹாரம், லட்சார்ச்சனை திருவிழா மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இந்த சூரசம்ஹாரத்தில் ஆறுமுக வேலவருக்கு திருமஞ்சனம் வேள்வி அர்ச்சனை வழிபாடு, சண்முக அர்ச்சனை அன்னை பராசக்தியிடம் வேல் வாங்கும் நிகழ்வு, வீரபாகு தூது, சூரசம்காரம் ஆறுமுக வேலவர் எழுந்தருளி கஜமுக சுரனையும் தாரகா சூரணையும் சிங்கமுக சூரணையும் சம்ஹாரம் செய்து சூரபதுமனை சேவலும் மயிலுமாக ஏற்றருளும் காட்சி நடைபெற்றது. கோவில் தலைவர் பெஸ்ட் எம் செல்வராஜ், செயலாளர் ஆர் அசோக்குமார், பொருளாளர் ஆர் ரவிக்குமார், துணைத் தலைவர் ஆர் ராஜேந்திரன், துணை செயலாளர் விசி ஆறுமுகம், துணை பொருளாளர் டி லட்சுமணன், ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மிகவும் பிரம்மாண்டமாக செய்திருந்தனர். சூரசம்காரம் நிகழ்வானது கோவில் சன்னிதானத்திலிருந்து புறப்பட்டு அப்பகுதி முழுவதும் ஊர்வலமாக நடைபெற்று பின்னர் சன்னிதானம் வந்தடைந்தது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். கோவில் நிர்வாகிகள் சார்பில் தெரிவிக்கையில் கந்த சஷ்டி விழாவானது கோவிலில் முதல் முறையாக நடைபெற்றது.

### கறம்பக்குடியில் பரபரப்பு

# வீடு புகுந்து 50 சவரன் தங்க நகை திருடி சென்ற முகமூடி கொள்ளையர்கள்

## போலீசார் தீவிர விசாரணை



**புதுக்கோட்டை, நவ. 9–**

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி பச்சநாயகுளம் அருகே வசித்து வருபவர் ஐயப்பன், தங்கலட்சுமி தம்பதியினர். இவர்களுக்கு திருமணம் 7 வருடங்களுக்கு முன்பு நடைபெற்று இரண்டு குழந்தைகள் உள்ளன. இந்நிலையில் ஐயப்பன் 10 வருடங்களுக்கு மேலாக சிங்கப்பூரில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். இந்நிலையில் இவரது வீட்டில் விடியற்காலை முகமூடி அணிந்த திருடர்கள் ஐயப்பன் வீட்டின் முன் கதவினை உடைத்து வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ஐயப்பன் மனைவி தங்கலட்சுமி, அவரது தாயார் பாக்கியசெல்வி மற்றும் அவரது குழந்தைகளை முகமூடி அணிந்த மர்ம நபர்கள் கத்தியை காட்டி மிரட்டி தங்கலட்சுமி, பாக்கியசெல்வி ஆகிய இருவர் கையையும் வாயையும் கட்டி போட்டு பீரோ சாவியை கொடு இல்லையென்றால் குழந்தைகளை கொன்று விடுவேன் என்று மிரட்டி பீரோ சாவியை கைப்பற்றி பீரோவில் இருந்த 50 பவுன் தங்க நகையை கொள்ளையடித்து சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் ஐயப்பனின் சகோதரர் சுரேஷ் என்பவர் சென்னையில் தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்த நிலையில் இன்று அதிகாலையில் அவரது வீட்டிற்கு சென்ற பொழுது வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த அவரது சகோதரர் ஐயப்பனின் மனைவி தங்கலட்சுமி மற்றும் அவரது தாயார் பாக்கிய செல்வியை கை மற்றும் வாய்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

மேலும் இது சம்பந்தமாக சுரேஷ் வீட்டில் இருந்தவர்களை கேட்டபொழுது முகமூடி அணிந்த மர்ம நபர்கள் கத்தியை காட்டி மிரட்டி பீரோவில் வைக்கப்பட்டிருந்த 50 சவரன் தங்க நகை கொள்ளையடித்து சென்றதாக தெரிவித்து கூச்சலிட்டு உள்ளனர். இதை கண்ட அக்கம் பக்கத்தினர் உடனே கறம்பக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதனை தொடர்ந்து கரம்பக்குடி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை ஈடுபட்டு வருகின்றனர். மேலும் கைரேகை நிபுணர் மோப்பநாய் உதவியுடன் முகமூடி கொள்ளையனை வலை வீசி தேடி வருகின்றனர். இன்று அதிகாலை பெண்களின் கைகள் மற்றும் வாயை கட்டி கத்தியை காட்டி மிரட்டி கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் கறம்பக்குடி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உர விற்பனை உரிமத்திற்கான சான்றிதழை அனைவரின் பார்வைக்கும் தெரியும்படி வைக்க வேண்டும்: கூடுதல் வேளாண் இயக்குனர் அறிவிப்பு

**காரைக்கால், நவ. 9–**

உர விற்பனை உரிமத்திற்கான சான்றிதழை அனைவரின் பார்வைக்கும் தெரியும்படி வைக்க வேண்டும் என, காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குனர் கணேசன் அறிவித்துள்ளார்.

காரைக்கால் மாவட்ட கூடுதல் வேளாண் இயக்குனர் கணேசன், இது குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: காரைக்கால் மாவட்டத்தில் தற்பொழுது 4,148 ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள சம்பா, தாளடி பருவ நெற்பயிருக் கான உரத்தேவை ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, இப்பயிருக்குத் தேவைப்படும் உரங்களை, வேளாண் துறையின் மூலம் உர விற்பனை உரிமம் பெற்ற தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் காரை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பயிருக்கு தேவையான யூரியா. டி.ஏ.பி. காம்ப்ளக்ஸ் மற்றும் பொட்டாஷ் போன்ற உரங்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. விவசாய பெருமக்களுக்கு இப்பருவத்திற்கு தேவையான உரங்கள் சரியான நேரத்தில் நியாயமாக கிடைக்க உறுதிசெய்யும் பொருட்டு, உர விற்பனை தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

முக்கியமாக, உர விற்பனை உரிமத்திற்கான சான்றிதழை அனைவரின் பார்வைக்கும் தெரியும்படி வைக்கவேண்டும். உர இருப்பு மற்றும் உர விற்பனை விலையை விற்பனை நிலையத்தில் அனைவரின் பார்வைக்கு தெரியும்படி உரக்கடையின் முகப்பில் வைக்க வேண்டும். உரங்கள் அரசு நிர்ணயிக்கப்பட்ட விலையில் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும். கூடுதல் விலைக்கோ, காரைக்கால் மாவட்டத்திற்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட உரங்களை காரைப் பகுதி விவசாயிகளை தவிர்த்து அண்டை மாநில விவசாயிகளுக்கு விற்பனை செய்வதைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். விவசாயிகளிடம் உர விற்பனையுடன் கூடுதலாக இணை உரங்களை கட்டாயப்படுத்தி விற்பனை செய்யக் கூடாது. விற்பனை அனுமதி பெறாத எந்தவித இடுபொருளையும் விற்பனை செய்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். உர விற்பனைக்கான ரசீதை போஸ் மிஷின் மூலமே போடவேண்டும். உர விற்பனை ரசீதை உரம் வாங்கும் விவசாயிகளுக்கு கண்டிப்பாக வழங்க வேண்டும். உர விற்பனை மற்றும் இருப்பு சம்பந்தமான அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 15ம் தேதி மற்றும் 30ம் தேதி அன்று சமர்ப்பிக்க வேண்டும். மேற்கண்ட நெறிமுறைகளை கடைபிடித்து உரவிற்பனை செய்யப்பட வேண்டும். இதனைப் பின்பற்றாமல் உர விற்பனை செய்யும் உரக்கடை உரிமையாளர்களின் மீது உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985ன் படி தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே இத்தருணத்தில் சட்டப்பூர்வமான நெறிமுறைகளுக்கு உட்பட்டு காரை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் உரவிற்பனை செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அந்த செய்திகுறிப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# திறனாய்வு தேர்வில் வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசு



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வில் வெற்றிப்பெற்ற மாணவிகளை பாராட்டி பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

## பனை கன்றுகள் நடும் பணி



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வீரடிப்பட்டி கிராமத்தில் நடந்த மாபெரும் எண்ணெய் பனை நடவு விழாவில், பனை கன்றுகள் நடும் பணியினை, செய்தியாளர்கள் பயணத்தின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா துவக்கி வைத்து அங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கினை பார்வையிட்டார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை.

## போதைப்பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு





கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் தெ.தி.இந்து கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற போதை ஒழிப்பு கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில் போதைப்பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம்.

## பாலம் அமைக்கும் பணியை ஆட்சியர் ஆய்வு



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா திருச்செங்கோடு நகராட்சி, கூட்டப்பள்ளி, வார்டு எண் 20ல் ஓடையின் குறுக்கே பாலம் அமைக்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## ஜவுளி விற்பனை வளாகம் அமைப்பது குறித்து ஆலோசனைக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஒட்டப்பிடாரம் வட்டத்தில் ஜவுளி விற்பனை வளாகம் அமைப்பது குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இயக்குநர், துணிநூல்துறை லலிதா தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா.

## நத்தம் நில வரித்திட்டம் குறித்து ஆட்சியர் ஆய்வு



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நில அளவை மற்றும் நிலவரி திட்ட இயக்குநர் மதுசூதன் ரெட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா முன்னிலையில் நிலஅளவைத்துறையின் சார்பில் இணையவழி பட்டா மாறுதல் மற்றும் நத்தம் நில வரித்திட்டம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார்.

## ஆவின் பால்பண்ணையில் அமைச்சர்கள் ஆய்வு



பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் ஆகியோர் சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் செயல்பாடுகள் குறித்து சேலம் ஆவின் பால்பண்ணையில் ஆய்வு மேற்கொண்டனர். உடன், ஆவின் மேலாண்மை இயக்குநர் வினீத், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி.

## புள்ளி இயல் கையேடு வெளியீடு



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மூலம் தயாரிக்கப்பட்ட 2023-24 ம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட புள்ளி இயல் கையேடு வெளியிட்டார்.

## விபத்தில் உயிரிழந்தவர் குடும்பத்துக்கு நிதி வழங்கல்



கன்னியாகுமரி மாவட்ட வன அலுவலகத்தில் மாவட்ட வன அலுவலர் பிராசாந்த் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது விபத்தில் உயிரிழந்த தனபால் குடும்பத்திற்கு ரூ.10 லட்சத்திற்கான காசோலை வழங்கினார்.

### திருவெண்ணெய்நல்லூரில்

# கலைஞர் சிலையை திறந்து வைத்த உதயநிதி ஸ்டாலினுக்கு பாராட்டு



**திருவெண்ணெய்நல்லூர், நவ 9-**

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் மரகதம் கந்தசாமி மண்டபம் முன்பு தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் திருவுருவ வெண்கல சிலையை தமிழக துணை முதலமைச் சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கு ஒன்றிய செயலாளரும் மாவட்ட கவுன்சிலருமான பேரங்கியூர் பி.வி.ஆர். விசுவநாதன், திருவெண் ணெய்நல்லூர் நகர செயலாளர் பூக்கடை கணேசன் ஆகியோர் பிரம் மாண்டமான ஏற்பாடு களை செய்திருந்தனர். இதையடுத்து சிலை திறப்பு விழாவிற்கு வருகை தந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு விழுப்புரம் கலைஞர் அறி வாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பி.வி.ஆர். விசுவநாதன், பூக்கடை கணேசன் ஆகியோர் நேரில் சந்தித்து மாலை அணிவித்து நன்றி தெரிவித்தனர்.

# மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வகுப்பறைகள் திறப்பு

**சங்கரன்கோவில், நவ. 9-**

சங்கரன்கோவிலில் தமிழக அரசு பள்ளிக் கல்வித் துறை சார்பில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 85.44 லட்சம் செலவில் கட்டப்பட்ட நான்கு வகுப்பறைகள் துணை கட்டிடங்களை தமிழக முதல்வர் முக ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் கலந்துகொண்டு முதல்வர் காணொலி வாயிலாக வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்த பின்



குத்துவிளக்கு ஏற்றி வைத்தார். தொடர்ந்து தலைமையாசிரியர் உள்பட ஆசிரியப் பெருமக்கள், மாணவியர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர் நிகழ்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் என் கேஎஸ்டி சுப்பிரமணியன், தலைமையாசிரியர் கீதா வேணி, பள்ளி மேலாண்மை குழு விஜய பிரியா, திஷாகமிட்டி உறுப்பினர் வழக்கறிஞர் சதீஷ், கவுன்சிலர்கள் முப்பிடாதி காவல்கிளி, அண்ணாமலை புஷ்பம் வட்ட கழகச் செயலாளர் இளங்கோ மாரியப்பன் மற்றும் ஆசிரியப் பெருமக்கள், மாணவியர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகம் சிறப்பாக செய்திருந்தது.

# தேவனூர் அரசு மேல்நிலை பள்ளியில் புதிய வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு



**வளத்தி, நவ. 9-**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தேவனூர் அரசு மேல் நிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் 84 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நான்கு வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டு அதன் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயி லாக புதிதாக கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்ததையடுத்து செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞ ரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி புதிய வகுப்பறை கட்டிடத்தில் குத்துவிளக் கேற்றி வைத்து பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி சக்திவேல், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சீனிவாசன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் மகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் அண்ணாமலை அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ் செழியன், சாந்தி சுப்பிர மணியன், பொதுப்பணித் துறை உதவி செயற்பொறி யாளர் கணேசன், உதவி பொறியாளர் ஜெயபால், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், அரசு ஒப்பந்ததாரர் இளங்கோ, கட்சி நிர்வாகிகள் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட் டோர் கலந்துகொண்டனர். பள்ளி உதவி தலைமை ஆசிரியர் இளங்கோவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# நரியன்கொள்ளையில் ஆபத்தான பால்வாடி கட்டிடத்தை சீரமைக்க கோரிக்கை

**புதுக்கோட்டை, நவ. 9-**

புதுக்கோட்டை மாவட் டம் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் மாங்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த நரியன் கொள்ளை கிராமத் தில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் சுமார் 50 ஆண்டு களுக்கு முன் கட்டப் பட்டது. இந்த அங்கன்வாடி யில் 40க்கும் மேற்பட்ட குழந்தைகள் படித்து வருகின்றனர். கட்டிடத்தின் மேற்கூரை ஆபத்தான நிலையில் இடிந்து விழுந்த வண்ணம் உள்ளது. இதனால் குழந்தைகளின் பெற்றோர் குழந்தைகளை பால்வாடிக்கு அனுப்ப மறுத்துவிட்டதாக தெரிவித்தனர். பின்னர் பழைய ஓட்டு கட்டிடத்தில் பள்ளி மாணவர்கள் படித்து வந்தனர். அந்த ஓட்டு கட்டிடம் பழு தடைந்ததால் மாணவர்கள் வேறு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டனர். தற்சம யம் பழுதடைந்த கட்டிடத்தில் பால்வாடி இயங்கி வருகிறது. தொடர் புடைய அதிகாரி களுக்கு பலமுறை நேரிடையாகவும், மனுக்கள் மூலமாகவும் தெரியப் படுத்தியும் எந்த அதிகாரியும் கண்டு கொள்ளவில்லை. மாங்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் மூலமாக பலமுறை ஒன்றிய ஆணையர், திட்ட அலுவலர், மாவட்ட



ஆட்சித் தலைவரிடம் மனுக்கள் கொடுத்தும் இதுவரை எந்த பயனும் இல்லை. தற்பொழுது மழைக்காலமாக இருப்ப தால் குழந்தைகளை பழுதடைந்த ஓட்டு கட்டிடத்தில் அமரவைக்க அச்சமாக உள்ளது என பெற்றோர்கள் தெரிவித் துள்ள னர். எனவே 50 வருடத்திற்கு முன்னதாக கட்டப்பட்டுள்ள பால்வாடி கட்டி டத்தை அப்புறப் படுத்தி விட்டு புதிய பால்வாடி கட்டிடம் கட்ட வேண்டும் என மாங் கோட்டை ஊராட்சி நரியன்கொள்ளை கிராம பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

# பள்ளி கட்டிடங்கள் திறப்பு விழா



தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தென்காசி மாவட்டத்தில் ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பள்ளிக் கட்டிடங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிட திறப்பு விழாவில் மாவட்ட ஆட்சித்லைவர் ஏ.கே கமல்கிஷோர், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா ஆகியோர் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார்கள்.

# கலையரங்கத்தை திறந்து வைத்த எம்எல்ஏ



**தூத்துக்குடி, நவ. 9-**

கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், வரதம்பட்டி ஊராட்சி, காட்டுராமன் பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ள கலையரங்க கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன் திறந்து வைத்தார். அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.42 லட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். அவருடன் கோவில்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துக்குமார், கோவில் பட்டி கிழக்கு ஒன்றிய செய லாளர் நவநீதக்கண்ணன், கோவில்பட்டி யூனியன் சேர்மன் கஸ்தூரிசுப்புராஜ், கோவில்பட்டி மத்திய ஒன்றிய செயலாளர் பீக்கிலிபட்டி முருகேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் தங்கமாரியம் மாள் தமிழ்ச்செல்வன், வரதம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்**

# தொழில்நுட்ப பணிகளுக்கான தேர்வு



**தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணைய உறுப்பினர் சரவணக்குமார் நாமக்கல் மாநகராட்சி, கோட்டை உயர்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் நடத்தும் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளுக்கான தேர்வு நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா.**

# முன்னாள் கவர்னர் கிரண்பேடியின் 'அச்சமற்ற ஆட்சி' புத்தகம் வெளியீடு

## பல்கலை மேலாண்மை, பிரெஞ்ச் துறை ஏற்பாடு




**புதுச்சேரி, நவ. 9-**

முன்னாள் கவர்னர் கிரண் பேடியின் 'அச்சமற்ற ஆட்சி' புத்தகத்தின் வெளியீட்டு விழா பல்கலைக்கழகத்தில் நடந்தது.

புதுச்சேரி முன்னாள் கவர்னர் கிரண்பேடி எழுதிய 'அச்சமற்ற ஆட்சி' எனும் புத்தகத்தின் பிரெஞ் ச் மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா புதுச்சேரி பல்கலையில் நேற்று நடந்தது. பல்கலைக் கழக துணைவேந்தர் தரணிக்கரசு விழாவிற்கு தலைமை தாங்கினார் முன்னாள் கவர்னர் கிரண்பேடி முன்னிலை வகித்தார்.

பல்கலைக்கழக துணை வேந்தர் தரணிக்கரசும், பிரான்ஸ் தூதர் எட்டியென் ரோலண்ட் பீக்கும் புத்தகத்தின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டனர். இந்த புத்தகத்தை பல்கலை முன்னாள் பிரெஞ்சு துறை தலைவர் பன்னீர்செல்வம் மொழி பெயர்த்துள்ளார்.

டாக்டர் கிரண்பேடி யின் இந்த புத்தகம், தைரியமான யோசனை களையும், அச்சமற்ற தலை மைத்துவ கொள்கை களையும், உலகளாவிய வாசகர்களுக்கு வழங்கு கிறது. பிரெஞ்சு மொழி பேசும் வாசகர்கள் இப் போது தலைமைத்துவத்தில் நேர்மை, பொறுப்புக்கூறல் மற்றும் தைரியத்தைப் பற்றி வலியுறுத்தும் இந்த புத்தகத்தை படித்து புதிய பார்வைகளில் பயணிக்க முடியும் என்பதை வலியுறுத்துகிறது என அனைவரும் வெகுவாக பாராட்டினர்.

விழாவில் பல்கலையின் கலாச்சார இயக்குனர் கிளமென்ட் லூர்து, பதிவா ளர் ரஜ்னீஷ் புட்டாணி, கிரண்பேடியின் முன்னாள் செயலாளர் தேவநீதிதாஸ், திஸ்டடி பள்ளியின் தாளாளர் சந்தியா செரியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழா நிறைவில், கிரண்பேடி பல்கலை மாணவர்களுடன் கலந்துரையாடினார். இதில் தலைமைத்துவம், சமூக சேவை, தைரியம், முன்னேற்றம் குறித்து தன்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இதற்கான ஏற்பாடுகளை, பல்கலை மேலாண்மை மற்றும் பிரெஞ்சு துறை ஏற்பாடு செய்திருந்தது.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007